# பீல் பிராந்திய பாடசாலை மன்றத்தில் விசேட கல்வி:
# (Special Education in the Peel District School Board)
# தனிப்பட்ட கல்வி திட்டங்கள் (ஐஈபீ)
# (Individual Education Plans - IEP)

## பெற்றோரிற்கான ஒரு வழிகாட்டி

### ஒரு தனிப்பட்ட கல்வி திட்டம் (Individual Education Plan) என்பது என்ன?

பீல் பிராந்திய பாடசாலை மன்றம் (Peel District School Board) உங்கள் பிள்ளையின் கற்றலை ஆதரிப்பதற்கான ஒரு வழியே இந்த திட்டமாகும். உங்கள் பிள்ளையின் விருப்பங்கள், ஆற்றல்கள், தேவைகள் மற்றும் இலக்குகளை நாம் புரிந்துகொள்ள விரும்புகின்றோம். எந்த பிள்ளையிற்கும் நாம் இவற்றை தெரிந்திருப்பது எமக்கு முக்கியமானதாகும். விசேட கற்றல் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளிற்கு, இத்தகவல்கள் ஒரு தனிப்பட்ட கல்வி திட்டமொன்றில் (Individual Education Plan) உள்ளடக்கப்பட்டுள்ளன. உங்கள் பிள்ளை வெற்றியெய்துவதற்கான விசேட கல்வி திட்டங்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்கு எமக்கு இந்த திட்டம் உதவுகின்றது.

### இத்திட்டம் எவ்வாறு விருத்திசெய்யப்படுகின்றது?

உங்கள் பிள்ளையின் பாடசாலையிலுள்ள விசேட கல்வி குழு பின்வருவோரின் உதவியுடன் இந்த திட்டத்தை எழுதுகின்றது:

- உங்கள் பிள்ளையின் ஆசிரியர்கள்.
- வேறு வல்லுநர்கள், உதாரணமாக வழிகாட்டுதல் ஆலோசகர்கள், செயற்பாட்டின் ஆரம்பத்தில் ஈடுபட்டிருந்த விசேட கல்வி அலுவலகர்கள், தலைமையாசிரியர், மற்றும் சமூக ஸ்தாபனங்கள் அல்லது சேவைகளிலிருந்து அலுவலகர்கள்.
- வேறு தகவல்கள், உதாரணமாக கடந்தகால தனிப்பட்ட கல்வி திட்டம் (Individual Education Plan - IEP), உங்கள் பிள்ளையின் ஒன்டேரியோ மாணவ பதிவு (Ontario Student Record), அல்லது மதிப்பாய்வுகள் (உதாரணமாக உங்கள் பிள்ளையின் கல்வி, சுகாதாரம் அல்லது நடத்தை).
- உங்கள் குடும்பம். ஒரு பெற்றார் என்ற முறையில், மிகச்சிறந்த திட்டத்தை உருவகிப்பதில் நீங்கள் ஒரு இன்றியமையாத பங்கினை வகிக்கின்றீர்கள். நீங்கள் வழங்கும் தகவல்கள், உங்கள் பிள்ளையின் குணாதிசயங்கள், விருத்தி, கற்றல் மற்றும் விருப்பங்கள் என்பனவற்றை பாடசாலையிற்கு புரிந்துகொள்ள உதவிசெய்கின்றது. உங்கள் பிள்ளையும் இத்திட்டத்தை வடிவமைப்பதில் ஈடுபாடடையக்கூடும் (அத்துடன் வயது 16 இற்கு பின்னர் ஆலோசிக்கப்படும் உரிமையைக் கொண்டுள்ளார்). கற்றல் இலக்குகளை

நிலைநாட்டுதல் போன்றவற்றில் மாணவர்கள் இச்செயற்பாட்டின் ஒரு பங்காக இருக்கும்பொழுது, அவர்களின் சொந்த கற்றலிற்கு கூடியளவு பொறுப்பேற்கின்றனர்.

உங்கள் பிள்ளை விசேட கல்வி ஆரம்பித்து 30 பாடசாலை நாட்களினுள் இத்திட்டம் உருவாக்கப்படவேண்டும். திட்டத்தின் ஒரு பிரதியை நீங்கள் பெறுவீர்கள், அத்துடன் இன்னொரு பிரதி உங்கள் பிள்ளையின் ஒன்டேரியோ மாணவ பதிவில் (Ontario Student Record), இடம்பெறும்.

**திட்டத்தில் உள்ளடக்கப்படுவது என்ன?**

ஆசிரியர்களும் ஆதரவு அலுவலகர்களும் உங்கள் பிள்ளையின் தேவைகளைப் பூர்த்திசெய்யவும், அவன் அல்லது அவளின் முன்னேற்றத்தை மேற்பார்வையிடவும் இத்திட்டத்தை உபயோகிக்கின்றனர். திட்டத்தில் பின்வரும் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன:

- விசேடத்தன்மை மற்றும் நிலையமர்த்துகை
- உங்கள் பிள்ளையின் கற்றல் தேவைகள், திறன்கள், கற்கும் பாணிகள், மற்றும் மதிப்பாய்வுகள்.
- உங்கள் பிள்ளை விசேட கற்பித்தல், ஆதரவு அல்லது/மற்றும் சேவைகளை பெற்றுக்கொண்டிருக்கும் பாடங்கள், பாடநெறிகள், அல்லது திட்டங்கள்.
- உங்கள் பிள்ளையிற்கு உதவ அவசியப்படும் ஆதரவு மற்றும் உத்திகளின் வகைகள்.
- வருடம் பூராகவும் எமக்கு கற்றலை அளக்க உதவுவதும், உங்கள் பிள்ளை சாதிக்கக்கூடியதென்ன என்பதையும் எமக்கு தெரிவிக்கும் இலக்குகளும் எதிர்ப்பார்ப்புகளும்.
- தங்கள் வாழ்க்கையின் அடுத்த கட்டத்திற்கு, உதாரணமாக உயர்நிலை பாடசாலை, வேறு படிப்புகள், வேலையிடம், அல்லது சமூகத்தில் வாழ்தல் போன்றவற்றிற்கு 14 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய மாணவர்களிற்கு அனுசரித்து நடக்க உதவும் ஒரு திட்டம்.

அனேக மாணவர்களிற்கு, முன்னேற்றம் அவர்களின் தேர்ச்சி அறிக்கையில் பதிவுசெய்யப்படும். உங்கள் பிள்ளையின் திட்டத்தைப் பொருத்து, தனிப்பட்ட கல்வி திட்டத்திலும் முன்னேற்றம் பதிவுசெய்யப்பட்டுள்ளதை நீங்கள் காணக்கூடும்.

**திட்டம் மாறுபடக்கூடுமா?**

வருடம் பூராகவும், உங்கள் பிள்ளையின் ஆசிரியர்கள் வெற்றிகரமான கற்றல் உத்திகளை கல்வி திட்டத்திலேயே குறிப்பிடுவார்கள்; அத்துடன் அவர்கள் உத்திகளை திருத்தியமைக்கவும் கூடும். அது எல்லாமே செயற்பாட்டின் பாகங்களாகும்.

ஒரு பாடசாலை வருடத்திற்கு (one school year) திட்டம் இலக்குகளை நிலைநாட்டுகின்றது; மற்றும் நாம் வருடத்திற்கொரு தடவை முறையாக அதை மீளாய்வு செய்து புதுப்பிக்கின்றோம். அத்துடன், உங்கள் பிள்ளையின் முன்னேற்றத்தை வருடம் பூராகவும் பாடசாலை மதிப்பிடுகின்றது. தேவைப்படும்பொழுது, உதாரணமாக உங்கள் பிள்ளையின் கற்றல் எதிர்ப்பார்த்ததைவிட சிறந்ததாக அல்லது தாமதமாக செல்லுகின்றதெனின், நாம் மாற்றங்களை செய்வோம்.

**நீங்கள் எங்கு மேலதிக தகவல்களைப் பெறலாம்?**

தனிப்பட்ட கல்வி திட்டம் (Individual Education Plan) மற்றும் விசேட கல்வியைப்பற்றி மேலுமறிவதற்கு, தயவுசெய்து:

- உங்கள் பிள்ளையின் ஆசிரியர் அல்லது தலைமையாசிரியரிடம் பேசுங்கள்.

- உங்கள் பிள்ளையின் பாடசாலையில் விசேட கல்வி ஆசிரியருடன் தொடர்புகொள்ளுங்கள்.

- பீல் பிராந்திய பாடசாலை மன்றம் (Peel District School Board) இணையதளத்திற்கு செல்லுங்கள், www.peelschools.org/speced

- ஒன்டேரியோ கல்வி அமைச்சு (Ontario Ministry of Education) இணையதளத்தினை www.edu.gov.on.ca இல் சந்தித்து, ஆரம்பநிலை (elementary) மற்றும் நடுத்தரநிலை (secondary) கல்வியில் கிலிக் செய்து, பின்பு விசேட கல்வி இணைப்புகளை (special education links) தொடருங்கள்.

- பீல் பிராந்திய பாடசாலை மன்றத்தை (Peel District School Board) ஐ 905-890-1099 அல்லது 1-800-668-1146 இணைப்பு 2345 இல் அழையுங்கள்.